நாள் 17.03.2025

எம்.சி.14/2023

மசா 2

பெயர் : சுமதி

க/பெ.உத்திரராஜன்

(Petitioner present. Respondent Petition u/s.125 Crpc filed and allowed.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. மனுதாரரின் மகன் பாலசபரீஸ்வரனுக்கு 18 வயது பூர்த்தியாகிவிட்டது என்றால் சரிதான். எனவே அவரை பொறுத்து ஜீவனாம்சம் பெற இயலாது என்றால் சரியல்ல. பாலசபரீஸ்வரன் தற்போது கல்லூரி படிப்பு படித்துக்கொண்டிருக்கிறார் எந்த வேலைக்கும் செல்லவில்லை.

2. எனது சகோதரி என்ன காரணத்திற்காக தற்கொலை முயற்சி செய்தார் என்றால் சரண்யா என்ற பெண்ணுடன் தனது கணவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்ததால் மனஉளைச்சலாகி என் தங்கை தற்கொலை முயற்சி செய்தார். தேவராஜ் என்ற நபருடன் என் தங்கை தொடர்ந்து பேசிக்கொண்டிருந்ததை எதிர் மனுதாரர் கண்டித்ததால் என் தங்கை தற்கொலை முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி தேவராஜ் உடல் நிலைய சரியில்லாதவர். அந்த பகுதியில் உள்ள அனைத்து பெண்களுமே அவருக்கு உதவி செய்வார்கள். அவ்வாறுதான் என் தங்கையும் உதவி செய்தார். தற்போது தேவராஜ் இறந்துவிட்டார்.

3. தொடர்ந்து தேவராஜ் என் தங்கை வீட்டுக்கு வந்ததால்தான் எதிர்மனுதாரர் என் தங்கையை கண்டித்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனது பெயரில் இருந்த இருசக்கர வாகனத்தை மேற்படி சரண்யா பெயருக்கு மாற்றம் செய்ததை என் தங்கை கண்டித்தால் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. மேற்படி சங்கதிகளுக்கு ஆவணம் என்னால் தாக்கல் செய்ய இயலும்.

4. என் தங்கை தற்கொலை முயற்றி செய்தபோது அதற்குண்டான மருத்துவ செலவுகளை எதிர்மனுதாரர்தான் பார்த்தார் என்றாலும் தொடாந்து என் தங்கை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் தனது திருமணம் தாண்டிய பழக்கத்தை தொடர்ந்து வந்ததால் எதிர் மனுதாரர் என் தங்கைக்கு பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டார் என்றால் சரியல்ல, எங்கள் பாட்டிதான் மேற்படி மருத்துவ செலவை செய்தார். என் தங்ககைக்கு அவ்வாறு எந்த பழக்கமும் இல்லை.

5. எனது பிரமாண பத்திரிக்கையில் சம்பவங்களின் தேதிகளை மாற்றி முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு மனைவி என்ற முறையில் எந்த கடமையும் ஆற்றவில்லை என்பதால் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனது மகனின் படிப்பு செலவை ஏற்றுக்கொள்வதற்கு கடமைப்பட்டவர்ஆவார்.

6. எதிர்மனுதாரர் தன்தாயாரை பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதாலும் மனுதாரர் வேலைக்கு சென்று தன்னைத்தானே பராமரித்துக்கொள்கிறார் என்பதாலும் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கிடைக்க தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் என் தங்கைக்கு ஆதரவாக தவறான சங்கதிகளை நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல். எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது)

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d M. A. Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.